Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349


# ஹலோ மிரர் மெட்ராஸ்

RNI No.TNBIL/2021/81709
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி


KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 3 | சென்னை | தினசரி | 6 பக்கம் | புதன்கிழமை, ஜனவரி 24 2024 | இதழ் 192

# ரூ.62.78 கோடி செலவில் அலங்காநல்லூரில் ஏறுதழுவுதல் அரங்கம்: ஸ்டாலின் திறந்தார் வரலாற்றில் இடம் பிடித்துவிட்டேன் என பெருமிதம்






*சென்னை, 24 ஜனவரி 2024:* முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று (24 ந் தேதி) மதுரை அலங்காநல்லூர், கீழக்கரையில் ரூ.62.78 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள உலகத்தரம் வாய்ந்த கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தை திறந்து வைத்தார்.

அப்போது அவர் பேசியதாவது: பல்லாயிரம் ஆண்டு பெருமை கொண்ட நம்முடைய தமிழினம் கொண்டாடும் ஏறுதழுவுதலுக்கான அரங்கத்தை கட்டி எழுப்பியவன் இந்த ஸ்டாலின் என்று வரலாற்றில் என்னுடைய பெயர் இடம்பெறுவது எனக்கு கிடைத்திருக்கக்கூடிய பெருமை.

தி.மு.க. ஆட்சி அமைந்து, மூன்று ஆண்டுகள்தான் ஆகியிருக்கிறது. அதற்குள்ளாக, மூன்று முக்கியமான கம்பீரச் சின்னங்களை இந்த மதுரையில் ஏற்படுத்தியிருக்கோம்.

ஒன்று, தமிழினத்தினுடைய பழமையை சொல்கின்ற கீழடி அருங்காட்சியகம் மதுரைக்கு அருகில் அமைக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாவது, கலைஞரின் பெயரால் மாபெரும் நூலகம் பிரமாண்டமாக மதுரை மாநகரில் அறிவு மாளிகையாக அமைக்கப்பட்டிருக்கிறது.

இப்போது மூன்றாவதாக, இந்த கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம் ஜல்லிக்கட்டுக்கு பெயர்போன அலங்காநல்லூரில் அமைக்கப்பட்டிருக்கிறது.

இதை சொல்லுகின்ற நேரத்தில், 2015 ம் ஆண்டு அறிவித்து, இன்றைக்கு வரைக்கும் மதுரைக்கு மத்தியில் இருக்கக்கூடிய ஒன்றிய பா.ஜ.க அரசால் கொண்டு வரப்படாத ஒரு திட்டம் இருக்கிறதே, அது உங்கள் ஞாபகத்திற்கு வந்தால், அதுக்கு நான் பொறுப்பில்லை.

இந்த அரங்கத்தை கம்பீரமாகவும், அழகாகவும் அமைத்துக் கொடுத்த பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலுவை பாராட்டுகிறேன்.

சென்னையில், கலைஞர் நினைவகமும் விரைவில் திறக்கப்பட இருக்கிறது.

இங்கே அமைந்திருக்கும் இந்த பண்பாட்டுச் சின்னம், தமிழினத்தின் பண்பாட்டு மரபின் தொடர்ச்சி. சிந்து சமவெளி காலத்து முத்திரைகளிலேயே திமில் காளைகள் இருக்கிறது. அதில் காளைகளின் நேர்கொண்ட பார்வையை நாம் பார்க்கலாம்.

பல்லாயிரம் ஆண்டுக்கு முன்பிருந்த ஓவியங்களில், திரண்டு தொங்கும் தாடை, அகன்று வளைந்த கொம்பு கொண்ட காளைகள் இருக்கிறது. ஏன், கீழடியில் திமிலுள்ள காளையின் முழு எலும்புக் கூடு கிடைத்திருக்கிறது. முல்லை நில மக்களுடைய வீர விளையாட்டாக இருந்திருக்கிறது. பழந்தமிழ் இலக்கியங்களிலும் இதைப் பற்றி உயர்வாக பாடப்பட்டிருக்கிறது.

“எழுந்தது துகள் ஏற்றனர் மார்பு கவிழ்ந்தன மருப்பு கலங்கினர் பலர்” என்று ஏறுதழுவுதல் காட்சியை நம்முடைய கண்முன்னே கொண்டு வருவது கலித்தொகை. தை மாதம் தொடங்கி பொங்கலுக்காக முதல் மூன்று நாள், அரசு கருவூலத்தை தவிர மற்ற பொது அலுவலகங்களை மூடவேண்டும் என்று பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் கவர்னர் அறிவித்திருக்கிறார்.

அந்தக் காலத்து கவர்னர்கள் தமிழர்களின் பண்பாட்டை சரியாக அறிந்தவர்களாக, அந்தக் காலத்து கவர்னர்கள் இருந்திருக்கிறார்கள். ஆண்டுதோறும் தை மாதம் ஏறுதழுவுதல் நடக்கும்போது அலங்காநல்லூரும், அவனியாபுரமும், பாலமேடும் உற்சாகத்தோடு காணப்படும்.

இந்த பண்பாட்டுத் திருவிழா உலகம் முழுவதும் பேசப்படும் என்று தான், இந்த அரங்கத்தை அமைக்கின்ற முடிவை எடுத்தோம்.

2007- ம் ஆண்டு உச்சநீதிமன்றம், ஜல்லிக்கட்டுக்கு தடை விதித்தபோதும், தடையை நீக்குவதற்காக வலுவான வாதங்களை வைத்து வாதாடியதும் போட்டிகள் நடத்தலாம் என்று அனுமதியைப் பெற்றதும் கழக ஆட்சியில்தான்.

மக்கள் போராட்டம்

ஆட்சி மாறியதும், 2014 ம் ஆண்டு ஜல்லிக்கட்டு நடத்த முடியாத சூழல் வந்தது. நம்முடைய இளைஞர்கள் சேர்ந்து, ‘மெரினா தமிழர் புரட்சி’ என்று சொல்கின்ற அளவிற்கு 2017 -ல் மிகப்பெரிய மக்கள் போராட்டம் சென்னைக் கடற்கரையில் நடந்தது.

அமைதி வழியில் போராடியவர்கள் மேல் வன்முறையை ஏவி கூட்டத்தை கலைத்தது அன்றைக்கு இருந்த அண்ணா திமுக ஆட்சி. அவர்களே ஆட்டோக்களுக்கு தீ வைத்து கொளுத்தி, அந்த கொடுமையான காட்சியெல்லாம் அப்போது வெளியானது.

தமிழ்நாடு முழுவதும் நடந்த போராட்டங்களுக்கு, அண்ணா திமுக ஆட்சி அடிபணிந்தது. அதன் பிறகுதான் மீண்டும் ஏறுதழுவுதல் போட்டிகளை நடத்துகிற நிலை உருவானது. ஆனாலும், நிரந்தர தீர்வு எட்டப்படவில்லை. ஒவ்வொரு ஆண்டும் அனுமதி தருகிறோம் என்ற பெயரில் ஒன்றிய பா.ஜ.க. அரசு நாடகம் ஆடியது. ஆனாலும், உச்சநீதிமன்றத்தில் வழக்கு நடந்து கொண்டுதான் இருந்தது. அந்த வழக்கில், ஒன்றிய அரசு உச்சநீதிமன்றத்தில் என்ன சொன்னது தெரியுமா?

''ஜல்லிக்கட்டு, மாட்டுவண்டி பந்தயம் உள்ளிட்ட போட்டிகளை நாங்கள் அங்கீகரிக்கவில்லை. மாட்டுவண்டி பந்தயம், ஜல்லிக்கட்டு போட்டியை ஊக்குவிக்கும் திட்டமும் இல்லை. கிராமப்புற வீரர்களை ஊக்குவிக்கும், கேலோ இந்தியா உள்ளிட்ட எந்தத் திட்டத்தின் கீழும் ஜல்லிக்கட்டு இல்லை" என்று தெரிவித்தார்கள் ஒன்றிய அரசு தரப்பில்.

நமது முயற்சியால்

”ஜல்லிக்கட்டு வெறும் பொழுதுபோக்கு போட்டி இல்லை. அது உழவர்களின் வாழ்வோடும், பண்பாட்டோடும் கலந்தது. போட்டிகளை பாதுகாப்பாக நடத்துகிறோம். காளைகளை நமது குடும்பங்கள் கவனத்தோடு வளர்க்கிறோம்” என்று அழுத்தம் திருத்தமாக வாதங்களை நாம் வைத்தோம். திராவிட மாடல் அரசின் தீவிர முயற்சியால், ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்தலாம் என்ற வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை கடந்த ஆண்டு மே மாதம் உச்சநீதிமன்றத்தில் பெற்றோம்.

ஒற்றுமையாக நடத்துவோம்

இந்த தருணத்தில் நான் உங்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புவது, ”சாதிப் பிளவுகளும், மத வேறுபாடுகளும், தமிழர் ஒற்றுமையை சிதைக்க பிற்காலத்தில் உருவாக்கப்பட்டவை என்பதை உணர்ந்து, தமிழர் என்ற நமது அடையாளத்தோடு இதுபோன்ற பண்பாட்டுத் திருவிழாக்களை ஒற்றுமையாக நடத்துவோம்!”

இந்த அரங்கில், காளைகள் வீரமாக களம் இறங்கட்டும். காளையர்கள் தீரமாக காளைகளை தழுவட்டும். தமிழர்கள் அனைவரும் ஒற்றுமை உணர்வோடு கண்டுகளிப்போம்.

இவ்வாறு மு.க.ஸ்டாலின் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, எ.வ.வேலு, மூர்த்தி, பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் உள்ளிட்ட அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தலைமை செயலாளர் சிவதாஸ் மீனா, மாவட்ட கலெக்டர் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

## மிஆ பை தனிஷ்க் வழங்கும் பளிச்சிடும் வைர நகைகளில் 20% வரை தள்ளுபடியைக் கொண்டாட இதுவே சரியான தருணம்

சென்னை, 24 ஜனவரி 2024: • இந்தியாவின் மிகவும் நவநாகரீகமான நகை ப்ராண்ட்டாக முக்கியத்துவம் பெற்றிருக்கும் மிஆ பை தனிஷ்க், ஆர்வத்தைத் தூண்டும் அசத்தலான சலுகைகளுடன் இந்த புத்தாண்டை தொடங்கும் வாய்ப்பை வழங்குகிறது. இதன் தொடர்ச்சியாக மிஆ பை தனிஷ்க், 'அதிகம் வாங்குங்கள், அதிகம் சேமியுங்கள்' சலுகையை அறிமுகப்படுத்தி இருக்கிறது. புத்தாண்டைக் கொண்டாடும் வகையில் அறிமுகமாகி இருக்கும் இந்த சலுகையின் மூலம் மிஆ பை தனிஷ்க் வழங்கும் அனைத்து வைர நகைகளை வாங்கும் போது 20%* வரை தள்ளுபடி வழங்கப்படுகிறது. உங்களுடைய எதிர்பார்புகளைப் பூர்த்தி செய்யும் இந்த வைர நகைகளின் மீது இதுவரையில்லாத சிறந்த சலுகையைப் பெற்று, அழகின் நேர்த்தியுடன் ஜொலித்திடுங்கள். ஏராளமான வடிவமைப்புகளில் ஜொலிக்கும் வைர நகைகள் மீது 3% முதல் 20% வரையிலான பிரத்தியேக தள்ளுபடிகளை பெற்று பயனடையும் வாய்ப்பை மிஆ பை தனிஷ்க் இப்போது வழங்குகிறது.

மேலும், நீங்கள் வாங்கும் நகையின் மதிப்பு 75,000-ரூபாய்க்கு அதிகமிருக்கும் பட்சத்தில் 20% தள்ளுபடியைப் பெற்று பலன் அடைய முடியும்.



இந்தியா முழுவதிலும் உள்ள தனிஷ்க் விற்பனை நிலையங்கள் மற்றும் ஆன்லைன் சேனல்களின் மூலம் வாங்கப்படும் மியாவின் அனைத்து வைர ஆபரணங்களுக்கும் இச்சலுகை 11 ஜனவரி 2024 முதல் பிப்ரவரி 26, 2024 வரை வழங்கப்படுகிறது. மேலும் என்சர்க்கிள் உறுப்பினர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் 11 ஜனவரி 2024 வரை முன்னோட்ட பிரத்தியேக சலுகை அளிக்கப்படுகிறது.

உங்களுடைய ப்ரியமானவர்கள் மீதான அன்பையும், காதலையும் வெளிப்படுத்தவும், கொண்டாட்டங்களுக்கான உணர்வை உத்வேகப்படுத்தவும் புத்தாண்டு ஒரு அருமையான வாய்ப்பாக அமைந்திருப்பதால், தனித்துவமான, ஸ்டைலான ஆபரணங்களை வாங்கி மகிழ்ச்சியில் திளைக்க இதுவே ஒரு மிகச்சரியான தருணம். உங்களுடைய மிகச்சிறந்த நண்பரின் அல்லது தோழியின் பிறந்தநாளாக இருந்தாலும் சரி, மனைவிக்கோ அல்லது நெருங்கிய தோழிக்கு ஆச்சரியத்தை கொடுக்க விரும்பினாலும் சரி, மனப்பூர்வமாக வாழ்த்துகளைச் சொல்ல விரும்பும் திருமண வைபவமாக இருந்தாலும் சரி, அந்த தருணங்களை மியா பை தனிஷ்க் வழங்கும் பிரத்தியேகமான நகைகளுடன் மிகவும் ஸ்பெஷலாக தருணங்களாக ஆக கொண்டாடுங்கள். எந்தவிதமான ஸ்டைலையும் நேர்த்தியாக்கும் அதிக வேலைப்பாடுகளும் ஆடம்பரமும் இல்லாத வடிவமைப்புகளை நீங்கள் விரும்பினாலும், உங்களது ஃபேஷன் அடையாளத்தை இப்படிதான் என்று காட்டும் பெரும் வேலைப்பாடுகளுள்ள நகைகளை எதிர்பார்த்தாலும், உங்களுக்காக மியா பை தனிஷ்க்கில் ஏராளமான நகைகள் இருக்கின்றன. இவை உங்களுடைய ரசனையையும், உங்களது அன்பிற்கு உரியவர்களின் ரசனையையும் பூர்த்தி செய்யும் வகையில் இடம்பெற்றுள்ளன.

இந்தச் சிறப்புச் சலுகையின் மூலம், ஸ்டட்கள், மோதிரங்கள், வளையல்கள், காதணிகள், காது ஓரம் அணியும் கஃப்கள், நெக்லஸ் போன்ற பல்வேறு வகைகளை உள்ளடக்கிய பிரமிக்கவைக்கும் வடிவமைப்புகளை மகிழ்ச்சியுடன் வாங்கி பயன்பெறுங்கள். மியா பை தனிஷ்க் விற்பனை நிலையங்களில் ஜொலிக்கும் தங்க நகைகளில் நுணுக்கமாக பதிக்கப்பட்ட பளபளக்கும் வைரங்களுடன் மிக நேர்த்தியான வடிவமைப்புகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. புத்தாண்டு விருந்துகள் முதல் ஆண்டுவிழாக்கள், காதலர் தினம், மாலை நேர விருந்துகள் மற்றும் பிறந்தநாள் என ஒவ்வொரு கொண்டாட்டத்திற்கும் மியா பை தனிஷ்க் உடன் இணைந்து ஒவ்வொரு தருணத்தையும் மறக்க முடியாத சிறந்த தருணமாக்குங்கள்.

இந்த சீசனில், மியா பை தனிஷ்க் வழங்கும் 'அதிகம் வாங்குகள், அதிகம் சேமியுங்கள்' சிறப்புச் சலுகையுடன் உங்கள் பரிசுகள் அனைத்திலும் மயக்கும் புன்னகைகள், அன்பான அரவணைப்புகள் மற்றும் பேரன்பு என இவையனைத்தும் இணைந்தே இருக்கட்டும்.

## இந்தியன் வங்கியின் 2023 டிசம்பர் முடிவடைந்த காலாண்டு / ஒன்பது மாதங்கள் நிதிசார் முடிவுகள் வங்கியின் உலகளாவிய பிசினஸ், முந்தைய ஆண்டைவிட 11% உயர்ந்து ரூ.11.64 லட்சம் கோடி



சென்னை, 24 ஜனவரி 2024:

• நிகர இலாபம், டிசம்பர்'22-ல் பதிவான ரூ.1396 கோடி என்பதிலிருந்து டிசம்பர்'23-ல் ரூ.2119 கோடியாக, முந்தைய ஆண்டைவிட 52% வளர்ச்சி கண்டிருக்கிறது

• வரிக்கு முந்தைய இலாபம், டிசம்பர்'22-ல் பதிவான ரூ.1546 கோடி என்பதிலிருந்து டிசம்பர்'23-ல் ரூ.2747 கோடியாக, முந்தைய ஆண்டைவிட 78% உயர்ந்திருக்கிறது

• செயல்பாட்டு இலாபம், டிசம்பர்'22-ல் பதிவான ரூ.4061 கோடி என்பதிலிருந்து டிசம்பர்'23-ல் ரூ.4097 கோடியாக அதிகரித்திருக்கிறது

• நிகர வட்டி வருவாய், டிசம்பர்'22-ல் பதிவான ரூ.5499 கோடி என்பதிலிருந்து டிசம்பர்'23-ல் ரூ.5815 கோடியாக, முந்தைய ஆண்டைவிட 6% அதிகரித்திருக்கிறது

• கட்டணம் சார்ந்த வருவாய், முந்தைய ஆண்டைவிட 21% வளர்ச்சி கண்டு டிசம்பர்'23-ல் ரூ.852 கோடியாக உயர்ந்திருக்கிறது

• சொத்துக்கள் மீதான இலாபமீட்டல் நிலை (ஆர் ஓ ஏ), டிசம்பர்'22-ல் இருந்த 0.80% என்பதிலிருந்து டிசம்பர்'23-ல் 31 பி பி எஸ் உயர்ந்து 1.11% ஆக வளர்ச்சி கண்டிருக்கிறது.

• பங்குகள் மீதான இலாபமீட்டல் நிலை (ஆர் ஓ ஈ), டிசம்பர்'22-ல் இருந்த 15.21% என்பதிலிருந்து டிசம்பர்'23-ல் 471 பி பி எஸ் மேம்பட்டு 19.92% ஆக வளர்ச்சி கண்டிருக்கிறது

• கடன்கள் மீதான வருவாய் (ஒய் ஓ ஏ), டிசம்பர்'22-ல் இருந்த 8.19% என்பதிலிருந்து டிசம்பர்'23-ல் 59 பி பி எஸ் உயர்ந்து 8.78% ஆக வளர்ச்சி கண்டிருக்கிறது

• முதலீடுகள் மீதான வருவாய் (ஒய் ஓ ஐ), டிசம்பர்'22-ல் இருந்த 6.52% என்பதிலிருந்து டிசம்பர்'23-ல் 28 பி பி எஸ் உயர்ந்து 6.80% ஆக வளர்ச்சி கண்டிருக்கிறது

• மொத்த கடன்கள், டிசம்பர் '22-ல் பதிவான ரூ.451658 கோடி என்பதிலிருந்து டிசம்பர்'23-ல் 13% வளர்ச்சி பெற்று ரூ.509800 கோடியாக அதிகரித்திருக்கிறது

• ஆர் ஏ எம் துறைக்கு (ரீடெய்ல், விவசாயம் மற்றும் எம் எஸ் எம் ஈ) வழங்கப்பட்ட கடன்கள் டிசம்பர்'22-ல் இருந்த ரூ.262811 கோடி என்ற அளவிலிருந்து டிசம்பர்'23-ல் ரூ.296845 கோடியாக உயர்ந்து 13% வளர்ச்சியை பதிவுசெய்திருக்கிறது

• மொத்த உள்நாட்டு கடன்களுக்கு ஆர் ஏ எம்-ன் பங்களிப்பு 62.58% ஆக இருக்கிறது. ரீடெய்ல், விவசாயம், எம் எஸ் எம் ஈ (ஆர் ஏ எம்) ஆகிய பிரிவுகளுக்கான கடன்கள் முந்தைய ஆண்டைவிட முறையே 14%, 16% மற்றும் 7% என அதிகரித்திருக்கின்றன. முந்தைய ஆண்டைவிட வீட்டுக்கடன் (அடமானம் உட்பட) 12%, ஆட்டோமொபைலுக்கான கடன் 46% மற்றும் தனிநபர் கடன் 30% என அதிகரித்திருக்கின்றன

• முன்னுரிமை துறைக்கான கடன் வழங்கல் டிசம்பர்'23-ல் ரூ.171480 கோடி ஆக பதிவாகியிருக்கிறது. ஒழுங்குமுறை தேவைப்பாடான 40%-க்கு எதிராக ஏ என் பி சி-யின் ஒரு சதவீதமாக முன்னுரிமை துறைக்கான கடன்கள் 43.71% ஆக பதிவாகியிருக்கிறது

• மொத்த டெபாசிட்கள் முந்தைய ஆண்டைவிட 10% வளர்ச்சி கண்டு டிசம்பர்'23-ல் ரூ.654154 கோடி என்ற அளவை எட்டியிருக்கிறது. முந்தைய ஆண்டோடு ஒப்பிடுகையில் சி ஏ எஸ் ஏ டெபாசிட் 8%, சேமிப்பு டெபாசிட் 7% மற்றும் நடப்பு டெபாசிட் 12% அதிகரித்திருக்கிறது

• உள்நாட்டு சி ஏ எஸ் ஏ விகிதம் 41.14% என பதிவாகியிருக்கிறது

• ஜி என் பி ஏ (மொத்த வாராக்கடன்கள்) டிசம்பர்'22-ல் இருந்த 6.53% லிருந்து முந்தைய ஆண்டோடு ஒப்பிடுகையில் 206 பி பி எஸ் குறைந்து 4.47% ஆக பதிவாகியிருக்கிறது. என் என் பி ஏ (நிகர வாராக்கடன்கள்) டிசம்பர்'22-ல் இருந்த 1.0% லிருந்து டிசம்பர்'23-ல் 47 பி பி எஸ் குறைந்து 0.53% ஆக பதிவாகியிருக்கிறது

• வாரா ஐயக்கடன்களுக்கான (பி சி ஆர்) நிதி ஒதுக்கீட்டு விகிதம் (டொ டபிள்யூ ஓ - தொழில்நுட்ப கடன் தள்ளுபடி உட்பட, பி சி ஆர்), டிசம்பர்'23-ல் 231 பி பி எஸ் அதிகரித்து 95.90% ஆக பதிவாகியிருக்கிறது

• மூலதன போதுமான நிலை விகிதம் 15.58% என்பதாகவும் மற்றும் சீ ஈ டி-1, முந்தைய ஆண்டைவிட 39 பி பி எஸ் உயர்ந்து 12.36% ஆக பதிவாகியிருக்கிறது மற்றும் அடுக்கு மி மூலதனம் 30 பி பி எஸ் வளர்ச்சி கண்டு 12.88% என்ற அளவில் இருக்கிறது

• நிகர இலாபம், செப்டம்பர்'23-ல் பதிவான ரூ.1988 கோடி என்பதிலிருந்து டிசம்பர்'23-ல் ரூ.2119 கோடியாக, முந்தைய காலாண்டைவிட 7% வளர்ச்சி கண்டிருக்கிறது

• வரிக்கு முந்தைய இலாபம், செப்டம்பர்'23-ல் பதிவான ரூ.5741 கோடி என்பதிலிருந்து டிசம்பர்'23-ல் ரூ.5815 கோடியாக உயர்ந்திருக்கிறது

• சொத்துக்கள் மீதான இலாபமீட்டல் நிலை (ஆர் ஓ ஏ), செப்டம்பர்'23-ல் இருந்த 1.06% என்பதிலிருந்து டிசம்பர்'23-ல் உயர்ந்து 1.11% ஆக வளர்ச்சி கண்டிருக்கிறது

• பங்குகள் மீதான இலாபமீட்டல் நிலை (ஆர் ஓ ஈ), செப்டம்பர்'23-ல் இருந்த 19.90% என்பதிலிருந்து டிசம்பர்'23-ல் உயர்ந்து 19.92% ஆக உயர்ந்திருக்கிறது

• கடன்கள் மீதான வருவாய் (ஒய் ஓ ஏ), செப்டம்பர்'23-ல் இருந்த 8.75% என்பதிலிருந்து டிசம்பர்'23-ல் உயர்ந்து 8.78% ஆக வளர்ச்சி கண்டிருக்கிறது மற்றும் முதலீடுகள் மீதான வருவாய் (ஒய் ஓ ஐ), செப்டம்பர்'23-ல் இருந்த 6.77% என்பதிலிருந்து டிசம்பர்'23-ல் உயர்ந்து 6.80% ஆக உயர்ந்திருக்கிறது

• உள்நாட்டளவில் நிகர வட்டி வருவாய் (என் ஐ எம்), டிசம்பர்'23-ல் 3.49% ஆக பதிவாகியிருக்கிறது

• வருவாய்க்கான செலவு விகிதம் டிசம்பர்'23-ல் 46.90% என பதிவாகியிருக்கிறது

• நழுவல் விகிதம், டிசம்பர்'23-ல் 1.28% ஆக கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது; செப்டம்பர்'23-ல் அளவான 1.77% என்பதுடன் ஒப்பிடுகையில் இது 49 பி பி எஸ் வளர்ச்சி எட்டப்பட்டிருக்கிறது

• நிகர இலாபம், நிதியாண்டு'23-ன் 9 மாத காலஅளவில் பதிவான ரூ.3834 கோடி என்பதிலிருந்து நிதியாண்டு'24-ன் 9 மாத காலஅளவில் ரூ.5816 கோடியாக, முந்தைய ஆண்டைவிட 52% வளர்ச்சி கண்டிருக்கிறது

• வரிக்கு முந்தைய இலாபம், நிதியாண்டு'23-ன் 9 மாத காலஅளவில் பதிவான ரூ.4461 கோடி என்பதிலிருந்து நிதியாண்டு'24-ன் 9 மாத காலஅளவில் ரூ.7894 கோடியாக, முந்தைய ஆண்டைவிட 77% உயர்ந்திருக்கிறது

• செயல்பாட்டு இலாபம், நிதியாண்டு'23-ன் 9 மாத காலஅளவில் பதிவான ரூ.11255 கோடி என்பதிலிருந்து நிதியாண்டு'24-ன் 9 மாத காலஅளவில் ரூ.12535 கோடியாக 11% அதிகரித்திருக்கிறது

• நிகர வட்டி வருவாய், நிதியாண்டு'23-ன் 9 மாத காலஅளவில் பதிவான ரூ.14717 கோடி என்பதிலிருந்து நிதியாண்டு'24-ன் 9 மாத காலஅளவில் ரூ.17258 கோடியாக, முந்தைய ஆண்டைவிட 17% அதிகரித்திருக்கிறது

• சொத்துக்கள் மீதான இலாபமீட்டல் நிலை (ஆர் ஓ ஏ), நிதியாண்டு'23-ன் 9 மாத காலஅளவில் இருந்த 0.75% என்பதிலிருந்து நிதியாண்டு'24-ன் 9 மாத காலஅளவில் 29 பி பி எஸ் உயர்ந்து 1.04% ஆக வளர்ச்சி கண்டிருக்கிறது.

• பங்குகள் மீதான இலாபமீட்டல் நிலை (ஆர் ஓ ஈ), நிதியாண்டு'23-ன் 9 மாத காலஅளவில் இருந்த 14.42% என்பதிலிருந்து நிதியாண்டு'24-ன் 9 மாத காலஅளவில் 483 பி பி எஸ் மேம்பட்டு 19.25% ஆக வளர்ச்சி கண்டிருக்கிறது

• உள்நாட்டளவில் நிகர வட்டி வருவாய் (என் ஐ எம்), நிதியாண்டு'23-ன் 9 மாத காலஅளவில் இருந்த 3.35% என்பதிலிருந்து நிதியாண்டு'24-ன் 9 மாத காலஅளவில் 19 பி பி எஸ் அதிகரித்து 3.54% ஆக வளர்ச்சி கண்டிருக்கிறது

• கடன்கள் மீதான வருவாய் (ஒய் ஓ ஏ), நிதியாண்டு'23-ன் 9 மாத காலஅளவில் இருந்த 7.60% என்பதிலிருந்து டிசம்பர்'23-ல் 109 பி பி எஸ் உயர்ந்து 8.69% ஆக வளர்ச்சி கண்டிருக்கிறது

• முதலீடுகள் மீதான வருவாய் (ஒய் ஓ ஐ), டிசம்பர்'22-ல் இருந்த 6.39% என்பதிலிருந்து டிசம்பர்'23-ல் 38 பி பி எஸ் உயர்ந்து 6.77% ஆக வளர்ச்சி கண்டிருக்கிறது.

## கோயம்பேட்டிலிருந்து 2 லட்சம் பயணிகள் முன்பதிவு கிளாம்பாக்கத்தில் இருந்து ஆம்னி பேருந்துகளை இயக்க முடியாது ஆம்னி பஸ் உரிமையாளர்கள் சங்கத் தலைவர் அறிவிப்பு

சென்னை, 24 ஜனவரி 2024: 2 லட்சம் பயணிகள் முன்பதிவு செய்துள்ள நிலையில் கிளாம்பாக்கத்தில் இருந்து ஆம்னி பேருந்துகளை இயக்க முடியாது என்று ஆம்னி பஸ் உரிமையாளர்கள் சங்கத் தலைவர் அறிவித்தள்ளார்.




சென்னை நகருக்குள் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை குறைக்க கிளாம்பாக்கத்தில் புதிதாக பேருந்து முனையம் திறக்கப்பட்டு உள்ளது. தென்மாவட்டங்கள், கோவை உள்ளிட்ட பகுதிகளுக்கு பொங்கல் பண்டிகையின்போது அரசு விரைவு பஸ்கள் அங்கிருந்து இயக்கப்பட்டன. பேருந்து நிலையம் திறக்கப்பட்டதில் இருந்து அனைத்து அரசு விரைவு பஸ்களும் கிளாம்பாக்கத்தில் இருந்து இயக்கப்படுகிறது. ஆம்னி பேருந்துகள் மட்டும் கோயம்பேடு பேருந்து நிலையத்தில் இருந்து இயக்கப்பட்டு வருகிறது. ஆம்னி பஸ்கள் இன்று முதல் கோயம்பேட்டில் இருந்து இயக்க தடை விதிக்கப்பட்டது. கிளாம்பாக்கத்தில் இருந்து இயக்க வேண்டும் என்று போக்குவரத்து ஆணையரகம் அறிவித்தது.

ஆனால் கோயம்பேட்டில் இருந்து ஆம்னி பேருந்துகளை இயக்க அனுமதிக்க வேண்டும் என ஆம்னி பஸ் உரிமையாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்து இருந்தது. அரசு இதுகுறித்து எதுவும் தெரிவிக்காத போதிலும் ஆம்னி பேருந்துகள் கோயம்பேட்டில் இருந்து இயக்கப்பட்டு வருகின்றன. இதனால் அமைச்சர் சேகர்பாபு இன்று காலை ஆம்னி பேருந்துகள் அனைத்தும் கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் இருந்து தான் இயக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி இருந்தார்.

இந்நிலையில் கோயம்பேட்டில் இருந்து தான் ஆம்னி பேருந்துகளை இயக்குவோம் என்று ஆம்னி பஸ் உரிமையாளர்கள் சங்க தலைவர் அன்பழகன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் கூறியதாவது:-

2 லட்சம் பயணிகள் முன்பதிவு செய்துள்ள நிலையில், கிளாம்பாக்கத்தில் இருந்து ஆம்னி பேருந்துகளை இயக்க முடியாது. இன்று மட்டும் 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயணிகள் முன்பதிவு செய்துள்ளனர். கிளாம்பாக்கத்தில் இருந்து ஆம்னி பேருந்துகளை இயக்க அவகாசம் வேண்டும். அரசு எங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தாமல் முடிவெடுத்துள்ளது.

பேருந்து நிலையம் தயாராகாமல் ஆம்னி பேருந்துகளை இயக்கினால் செங்கல்பட்டு வரை போக்குவரத்து நெரிசல் ஏற்படும். ஆம்னி பேருந்துகள் வழக்கம்போல் கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்து தான் இயக்கப்படும். மாநகரப் பகுதியில் உள்ள பயணிகள் எங்கு முன்பதிவு செய்துள்ளார்களோ அந்த பகுதிக்கு நேரில் சென்று பயணம் மேற்கொள்ளலாம் என கூறினார்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# அண்ணா தி.மு.க. தேர்தல் குழுக்கள் நாளை முதற்கட்ட ஆலோசனை



சென்னை, 24 ஜனவரி 2024: அண்ணா தி.மு.க. தேர்தல் குழுக்கள் நாளை முதற்கட்ட ஆலோசனையில் ஈடுபடுகிறது.

விரைவில் நாடாளுமன்ற தேர்தல் தொடர்பான அறிவிப்பு வெளியாக உள்ளது. இந்த நிலையில் தேர்தலை எதிர்கொள்வதற்காக அரசியல் கட்சிகள் தங்களை முழுவீச்சில் தயார்படுத்தும் பணியில் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

இதற்கிடையில் தொகுதி பங்கீடு, தேர்தல் அறிக்கை, தேர்தல் பணிகள் போன்றவற்றுக்காக 4 குழுக்களை அண்ணா தி.மு.க. அமைத்து உள்ளது. கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கண்காணிப்பில் செயல்பட உள்ள இந்த 4 குழுக்களும் நாளை (வியாழக்கிழமை) சென்னையில் முதற்கட்ட ஆலோசனை நடத்த உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

4 குழுக்களில் இடம்பெற்று இருப்பவர்களும் அடுத்த கட்ட பணிகள் குறித்து ஆலோசனை நடத்த உள்ளனர். குறிப்பாக வேட்பாளர் தேர்வு பற்றி விரிவாக ஆலோசிக்கப்படும் என்று கூறப்படுகிறது. தொகுதி பங்கீடுக்காக கே.பி.முனுசாமி, திண்டுக்கல் சீனிவாசன், பி.தங்கமணி, எஸ்.பி.வேலுமணி, பென்ஜமின் ஆகிய 5 பேர் கொண்ட குழுவை எடப்பாடி பழனிசாமி உருவாக்கி இருக்கிறார். நாளை இந்த குழு முக்கிய முடிவுகளை மேற்கொள்ளும் என்று தெரிகிறது.

அதுபோல நத்தம் விஸ்வநாதன் தலைமையிலான தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவும் நாளை ஆலோசனை நடத்தி அடுத்த கட்ட பணிகள் குறித்து முடிவு செய்ய உள்ளது. அண்ணா தி.மு.க.வில் தம்பிதுரை தலைமையில் தேர்தல் பிரச்சார குழு அமைக்கப்பட்டு உள்ளது. அண்ணா தி.மு.க.வின் நாளைய ஆலோசனை கூட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

# இந்தியா கூட்டணியில் இருந்தாலும் மேற்கு வங்கத்தில் தனித்துத்தான் போட்டி - மம்தா





சென்னை, 24 ஜனவரி 2024: இந்தியா கூட்டணியில் இருந்தாலும் மேற்கு வங்கத்தில் தனித்துத்தான் போட்டி என அம்மாநில முதலமைச்சர் மம்தா அதிரடியாக அறிவித்துள்ளார்.

2024 மக்களவைத் தோதலில் ஆளும் பாஜகவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஒருங்கிணைந்து 'இந்தியா' கூட்டணியை உருவாக்கியுள்ளன. 'இந்தியா' கூட்டணியின் முதல் 3 ஆலோசனைக் கூட்டங்கள் முறையே பாட்னா, பெங்களூரு, மும்பை ஆகிய நகரங்களில் நடைபெற்றன. தொடர்ந்து இந்தியா கூட்டணி கட்சிகளின் நான்காவது கூட்டம் டெல்லியில் டிசம்பர் 19-ஆம் தேதி நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து, நாடாளுமன்றத் தேர்தலுக்கான வியூகம், தொகுதிப் பங்கீடு உள்ளிட்டவை குறித்து ஆலோசனை செய்வதற்காக இந்தியா கூட்டணி தலைவர்களின் ஆலோசனைக் கூட்டம் ஜனவரி 13 ந்தேதி காணொலி வாயிலாக நடைபெற்றது. திமுக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின், காங்கிரஸ் முக்கியத் தலைவர் ராகுல் காந்தி, மார்க்சிஸ்ட் மூத்த தலைவர் சீதாராம் யெச்சூரி உள்ளிட்ட தலைவர்கள் இதில் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில், காங்கிரஸ் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே இந்தியா கூட்டணிக் கட்சிகளின் தலைவராக தேர்வு செய்யப்பட்டார். இந்த நிலையில் மேற்கு வங்காள முதலமைச்சர் மம்தா பானர்ஜி இன்று செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

' நாடாளுமன்ற தேர்தல் தொடர்பாக காங்கிரஸ் கட்சியுடன் எந்த விதபேச்சுவார்த்தையும் இதுவரை நடத்தவில்லை இந்தியா கூட்டணியில் இருந்தாலும் மேற்கு வங்கத்தில் தனித்துத்தான் போட்டியிடுவோம். தனித்து போட்டியிட்டு பாஜகவை தோற்கடிப்போம். மேற்கு வங்கம் வழியாகத்தான் ராகுல் காந்தியின் இந்திய ஒற்றுமை நீதிப் பயணம் செல்வதாக திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் அது குறித்து எங்களுக்கு எந்த தகவலும் வரவில்லை எனவும் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

# இந்தியாவில் கேலக்சி எஸ்24 தொடர் மூன்று நாட்களில் 250,000 முன்பதிவுகள், சிறப்பான தொடக்கம்

சென்னை, 24 ஜனவரி 2024: இந்தியாவின் மிகப் பெரிய எலக்ட்ரானிக்ஸ் நிறுவனமான சாம்சங், சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட முதன்மையான கேலக்ஸி எஸ்24 சீரிஸ் முன்பதிவுகளைப் பெற்றுள்ளதாக இன்று அறிவித்தது. இந்தியாவில் மூன்று நாட்களுக்கு முன்பு ஜனவரி 18 அன்று முன்பதிவுகள் துவங்கியதில் இருந்து இந்தியாவில் 250,000க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் கேலக்சி எஸ்24 ஸ்மார்ட்போனை ஆர்டர் செய்துள்ளனர். ஒப்பிடுகையில், சாம்சங் இந்தியாவில் மூன்று வார காலப்பகுதியில் அதன் கேலக்சி எஸ்23 தொடருக்கான 250,000 முன்பதிவுகளைப் பெற்றுள்ளது.

"கேலக்சி ஏ ஐ ஆல் இயக்கப்படும் கேலக்சி எஸ்24 தொடர், மொபைல் புரட்சியின் புதிய சகாப்தத்தை அறிமுகப்படுத்துகிறது மற்றும் புதிய சாத்தியங்களைத் திறக்க ஏ ஐ இன் சக்தியை நுகர்வோரின் கைகளுக்கே கொண்டுசெல்கிறது . கேலக்சி எஸ்24 உடன், நுகர்வோர் தகவல்தொடர்பு தடைகளைத் தாண்டி, தங்கள் உற்பத்தித்திறனை படைப்பாற்றலை அதிகரிக்க முடியும்.,மற்றும் இது அவர்களின் அன்றாட வாழ்க்கையை மேம்படுத்தும் . கேலக்சி எஸ்24 தொடரின் மாபெரும் வெற்றி, இந்திய நுகர்வோர்கள் புதிய தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொண்டார்கள் என்பதை நிரூபிக்கிறது. கேலக்சி எஸ்24 தொடருக்கான அமோகமான வெற்றிக்கு எங்கள் வாடிக்கையாளர்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன், "என்று மூத்த துணைத் தலைவர் ராஜு புல்லன் கூறினார். , எம் எக்ஸ் பிசினஸ், சாம்சங் இந்தியா.

'மேட் இன் இந்தியா' கேலக்சி எஸ்24 அல்ட்ரா, கேலக்சி எஸ்24+ மற்றும் கேலக்சி எஸ்24 ஸ்மார்ட்போன்கள், லைவ் டிரான்ஸ்லேட், மொழிபெயர்ப்பாளர், அரட்டை உதவி, குறிப்பு உதவி மற்றும் டிரான்ஸ்கிரிப்ட் அசிஸ்ட் அம்சங்களுடன் போனின் அடிப்படைப் பாத்திரமான தகவல்தொடர்புகளை மேம்படுத்தி மறுவரையறை செய்கிறது. சாம்சங் கீபோர்டில் உள்ளமைக்கப்பட்ட ஏ ஐ ஆனது இந்தி உட்பட 13 மொழிகளில் செய்திகளை நிகழ்நேரத்தில் மொழிபெயர்க்கலாம். காரில், ஆண்ட்ராய்ட் ஆட்டோ தானாகவே உள்வரும் செய்திகளைச் சுருக்கி, தொடர்புடைய பதில்களையும் செயல்களையும் பரிந்துரைக்கும்.

கேலக்சி எஸ்24 ஆனது தேடல் வரலாற்றில் ஒரு மைல்கல்லைக் குறிக்கிறது, இது நிஷீஷீரீறீமீ உடன் தேடுவதற்கு உள்ளுணர்வு, சைகையால் இயக்கப்படும் வட்டத்தை அறிமுகப்படுத்திய முதல் தொலைபேசியாகும். பயனுள்ள, உயர்தர தேடல் முடிவுகளைப் பார்க்க, பயனர்கள் கேலக்சி எஸ்24 இன் திரையில் காணலாம் , எழுதலாம் அல்லது எதையும் தட்டலாம். சில தேடல்களுக்கு, ஏ ஐ - இயங்கும் மேலோட்டப் பார்வைகள் இணையம் முழுவதிலும் இருந்து ஒன்றாக இணைக்கப்பட்ட பயனுள்ள தகவல் மற்றும் சூழலை வழங்க முடியும்.

கேலக்சி எஸ்24 தொடரின் ப்ரோவிசுவல் இன்ஜின் என்பது ஏ ஐ-இயங்கும் கருவிகளின் ஒரு விரிவான தொகுப்பாகும், இது படத்தைப் பிடிக்கும் திறன்களை மாற்றுகிறது மற்றும் படைப்பு சுதந்திரத்தை அதிகரிக்கிறது. கேலக்ஸி எஸ்24 அல்ட்ராவில் உள்ள குவாட் டெலி சிஸ்டம் இப்போது புதிய 5எக்ஸ் ஆப்டிகல் ஜூம் லென்ஸுடன் வருகிறது, இது அடாப்டிவ் பிக்சல் சென்சார் மூலம் 2எக்ஸ், 3எக்ஸ், 5எக்ஸ் முதல் 10எக்ஸ் வரை ஜூம் நிலைகளில் ஆப்டிகல்-தர செயல்திறனை செயல்படுத்த 50எம்பி சென்சாருடன் செயல்படுகிறது. மேம்படுத்தப்பட்ட டிஜிட்டல் ஜூம் மூலம் படங்கள் 100எக்ஸ் படிக தெளிவான முடிவுகளைக் காட்டுகின்றன.

மேம்படுத்தப்பட்ட நைட்கிராஃபி திறன்களுடன், கேலக்சி எஸ்24 ஸ்பேஸ் ஜூமில் எடுக்கப்படும் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் எந்த நிலையிலும், பெரிதாக்கப்பட்டாலும் கூட, சிறப்பானதாக இருக்கும். கேலக்சி எஸ்24 அல்ட்ரா இன் பெரிய பிக்சல் அளவு, இப்போது 1.4 யூஎம், 60% பெரியது, மங்கலான நிலையில் அதிக ஒளியைப் பிடிக்க உதவுகிறது. பரந்த ஆப்டிகல் இமேஜ் ஸ்டேபிலைசர் (ஓ ஐ எஸ்) கோணங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட ஹேண்ட்-ஷேக் இழப்பீடு மங்கலைக் குறைக்க உதவுகிறது. முன் மற்றும் பின்புற கேமராக்கள் இரண்டும் இரைச்சலைக் குறைக்க பிரத்யேக ஐ எஸ் பி பிளாக் பொருத்தப்பட்டுள்ளன.

கேலக்சி எஸ்24 தொடரில் உள்ள கேலக்சி ஏ ஐ எடிட்டிங் கருவிகள் அழித்தல், மீண்டும் எழுதுதல் மற்றும் ரீமாஸ்டர் போன்ற எளிய திருத்தங்களைச் செயல்படுத்துகின்றன. திருத்து பரிந்துரையானது ஒவ்வொரு புகைப்படத்திற்கும் மிகவும் பொருத்தமான மாற்றங்களை பரிந்துரைக்க கேலக்சி ஏ ஐ ஐப் பயன்படுத்துகிறது, அதே சமயம் ஜெனரேட்டிவ் எடிட் ஒரு படத்தின் பின்னணியின் பகுதிகளை உருவாக்கும் ஏ ஐ உடன் நிரப்ப முடியும். ஒரு படத்தைப் பெருக்க கேலக்சி எஸ்24 எந்த நேரத்திலும் ஜெனரேட்டிவ் ஏ ஐ ஐப் பயன்படுத்தினால், படத்திலும் மெட்டாடேட்டாவிலும் வாட்டர்மார்க் தோன்றும்.

புதிய இன்ஸ்டன்ட் ஸ்லோ-மோ இயக்கங்களின் அடிப்படையில் கூடுதல் பிரேம்களை உருவாக்கி, மேலும் விரிவான தோற்றத்திற்காக செயல்-நிரம்பிய தருணங்களைச் சீராகக்கும் . ஷட்டரை அழுத்தும் முன் சூப்பர் எச்டிஆர் உயிரோட்டமான மாதிரிக்காட்சிகளை வெளிப்படுத்துகிறது.

# இந்தியாவில் விமானப் போக்குவரத்தின் எதிர்காலத்தை மேம்படுத்தும் வகையில் பிரதமர் மோடி இரண்டு முக்கிய போயிங் முன்முயற்சிகளை அறிவித்துள்ளார்



சென்னை, 24 ஜனவரி 2024: பாரதப் பிரதமர் திரு.நரேந்திர மோடி, இந்தியாவின் ஏரோஸ்பேஸ் மற்றும் பாதுகாப்புத் துறையை கணிசமாக முன்னேற்றுவதற்கு உறுதியளிக்கும் இரண்டு முக்கிய போயிங் முன்முயற்சிகளை இன்று நாட்டிற்கு அர்பணித்துள்ளார்.

நாட்டின் வளர்ந்து வரும் விமானப் போக்குவரத்துத் துறையில் இந்தியா முழுவதிலும் இருந்து அதிக பெண்கள் கால்பதிப்பதை ஆதரிக்கும் நோக்கில் போயிங் சுகன்யா திட்டத்தை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். இந்த திட்டம் இந்தியா முழுவதும் உள்ள பெண்கள் மற்றும் பெண்களுக்கு அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (ஸ்டெம்) துறைகளில் முக்கியமான திறன்களைக் கற்றுக்கொள்வதற்கும், விமானத் துறையில் வேலைகளுக்குப் பயிற்சி பெறுவதற்கும் வாய்ப்புகளை வழங்கும். இளம் பெண்களுக்காக, ஸ்டெம் தொழில்களில் ஆர்வத்தைத் தூண்டுவதற்கு 150 திட்டமிடப்பட்ட இடங்களில் ஸ்டெம் ஆய்வகங்களை இந்தத் திட்டம் உருவாக்கும். இத்திட்டத்தின் மூலம் விமானியாக பயிற்சி பெறும் பெண்களுக்கு உதவித்தொகை வழங்கப்படும். முதலீடுகள் விமானப் பயிற்சி பாடத்திட்டம், சான்றிதழ்களைப் பெறுதல், சிமுலேட்டர் பயிற்சிகளுக்கான நிதி மற்றும் தொழில் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ஆதரவளிக்கும்.

பெங்களூருவில் புதிய அதிநவீன போயிங் இந்தியா பொறியியல் மற்றும் தொழில்நுட்ப மையம் (பி ஐ டி ஈ சி) வளாகத்தை பிரதமர் மோடி அதிகாரப்பூர்வமாக திறந்து வைத்தார். ரூ. முதலீட்டில் கட்டப்பட்டது. 1,600 கோடி, 43 ஏக்கர் வளாகம், அமெரிக்காவிற்கு வெளியே போயிங்கின் மிகப்பெரிய முதலீடாகும், மேலும் இது உலக விண்வெளி மற்றும் பாதுகாப்புத் துறைக்கான அடுத்த தலைமுறை தயாரிப்புகள் மற்றும் சேவைகளில் இந்தியாவுடன் கூட்டு சேர்வதற்கான ஒரு மூலக்கல்லாக மாறும்.

பிரதமருடன் மாண்புமிகு கர்நாடக ஆளுநர் திரு.தாவர் சந்த் கெலாட்; மாண்புமிகு கர்நாடக முதல்வர், திரு.சித்தராமையா; கர்நாடக சட்டமன்றத்தின் எதிர்கட்சித் தலைவர் திரு.ஆர்.அசோகா மற்றும் போயிங் தலைமை இயக்க அதிகாரி, ஸ்டெபானி போப் மற்றும் பல மூத்த போயிங் நிர்வாகிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

“உலகின் வளர்ச்சி இயந்திரமாக இந்தியாவை நான் பார்க்கிறேன். விண்வெளியில் இந்தியாவை ஆத்மநிர்பர் ஆக்குவதற்கான எங்கள் உறுதிப்பாட்டின் மூலம் விமானப் போக்குவரத்து மற்றும் பாதுகாப்புத் துறையில் நாங்கள் செய்த சாதனைகளைப் பற்றி நான் பெருமைப்படுகிறேன், "என்று பிரதமர் மோடி கூறினார். “இன்று, நாட்டின் முன்னுரிமையானது துறைகள் முழுவதும் பெண்களின் முழுமையான பங்களிப்பில் உள்ளது. பெண்கள், தொழில்துறை மற்றும் சமூகம் விண்வெளியில் வாய்ப்புகளை உணரும் விதத்தில் போயிங் சுகன்யா திட்டம் ஒரு படி-மாற்றமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். கர்நாடகாவின் பெங்களூருவில் உள்ள இந்த உலகத் தரம் வாய்ந்த பொறியியல் மற்றும் தொழில்நுட்ப வளாகத்தின் மூலம் நாட்டில் கணிசமான முதலீடு செய்துள்ள போயிங் நிறுவனத்தை நான் வாழ்த்துகிறேன், இது புத்தாக்கம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மற்றும் நாட்டில் பலருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கும்.

"பிரதமர் மோடியின் இந்தியாவுக்கான மாற்றப் பார்வையை ஆதரிப்பதில் நாங்கள் பெருமையடைகிறோம் மற்றும் பாக்கியம் பெற்றுள்ளோம், மேலும் நாட்டில் ஏரோஸ்பேஸ் கண்டுபிடிப்புகளை வளர்க்க அவர் போயிங் வளாகத்தை அர்ப்பணித்ததற்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்," என்று போயிங் தலைவரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான டேவிட் எல். கால்ஹவுன் கூறினார்.

போயிங் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி ஸ்டெஃபனி போப் அவர்கள், “போயிங் சுகன்யா திட்டத்தை பிரதமர் மோடி தனிப்பட்ட முறையில் தொடங்கிவைத்ததில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். ஒன்றாக, இந்தியா முழுவதும் உள்ள பெண்களுக்கு விமானப் போக்குவரத்துத் துறையில் தொழில் மற்றும் தலைமைப் பதவிகளைத் தொடருவதற்கான வாய்ப்பை விரிவுபடுத்த உதவுவோம்.

பல ஆண்டுகளாக, போயிங் இந்தியா தனது பொறியியல் மற்றும் ஆர்&டி திறமைகளில் தனது குழுவை அமெரிக்காவிற்கு வெளியே எந்த நாட்டிலும் அதிக எண்ணிக்கையிலான ஊழியர்களாக வளர்த்துள்ளது, டிசம்பர் 2023 நிலவரப்படி 6,000க்கும் அதிகமான பணியாளர்கள் உள்ளனர்.

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

புதன்கிழமை,
ஜனவரி 24, 2024

# ஜி சி டி பி - பள்ளி மாணவர்களுக்கான மாதிரி தயாரிப்பு போட்டி





















சென்னை, 24 ஜனவரி 2024: போக்குவரத்து விதிகள் மற்றும் விதிமுறைகள் மற்றும் சாலைப் பலகைகள் குறித்து பள்ளிக் குழந்தைகளுக்குக் கற்பிப்பதற்காக 1982 ஆம் ஆண்டு ஆர் எஸ் பி (ரோட் சேப்டி பேட்ரோல்) நிறுவப்பட்டது. தற்போது, 324 பள்ளிகளில் 28,000 பள்ளிக் குழந்தைகள் ஜி சி டி பி உடன் சேர்ந்துள்ளனர்.

சாலைப் பாதுகாப்பு மாதத்தின் ஒரு பகுதியாக, மாணவர்களின் படைப்பாற்றலை மேம்படுத்தவும், போக்குவரத்து பற்றிய அவர்களின் அறிவை மதிப்பிடவும், சென்னை பெருநகரக் காவல் ஆணையாளர் திரு.சந்தீப் ராய் ரத்தோர், இ.கா.ப அவர்களின் அறிவுறுத்தலின்படி, போக்குவரத்து கூடுதல் ஆணையாளர் வழிகாட்டுதலின் பேரில், மாதிரி தயாரிப்பு போட்டி அறிவிக்கப்பட்டு, போக்குவரத்து தொடர்பான மாதிரிகள் (குறிப்பாக சென்னை பெருநகரம்) தயாரிக்கும் போட்டி இன்று (20.01.2024) சென்னை செயின்ட் ஜார்ஜ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் 67 பள்ளிகளைச் சேர்ந்த 248 மாணவர்கள் கலந்து கொண்டு 102 மாதிரிகள் ஆர்எஸ்பி மாணவர்களால் காட்சிப்படுத்தப்பட்டன. மாதிரிகள் பெரும்பாலும் சித்தரிக்க கருப்பொருளாக இருந்தன

i) போக்குவரத்து விதிகளை கடைபிடித்தல்

ii) விபத்து தடுப்பு

iii) ஜீரோ சிக்னல் சந்திப்பு

வீஸ்) ஆம்புலன்ஸ் எச்சரிக்கை அமைப்பு

ஸ்) தொழில்நுட்ப போக்குவரத்து மேலாண்மை முறை

சிறந்த 3 மாடல்கள் தேர்வு செய்யப்பட்டு முதல் பரிசுக்கு (டி ஏ வி பள்ளி, ஆதம்பாக்கம்) ரூ.50,000/-ரொக்கப்பரிசும், இரண்டாம் பரிசு (ஸ்ரீ பாதல்சந்த் சாயர்சந்த் சோர்டியா ஜெயின் வித்யாலயா மெட்ரிக் பள்ளி, சவுகார்பேட்டை) ரூ.25,000/- ம் மற்றும் 3வது பரிசு (அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி,



அசோக் நகர்) ரூ.10,000/-ம் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் போக்குவரத்து மற்றும் துணை ஆணையாளர் கிழக்கு மற்றும் வடக்கு போக்குவரத்து காவல் காவல்துறை இணை உள்ளிட்டோர் கலந்து ஆணையர்கள், கொண்டனர்.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

ஹலோ மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

புதன்கிழமை,
ஜனவரி 24, 2023

## முன்னாள் அமைச்சர் சி.வி. சண்முகம் மீதான 4 அவதூறு வழக்குகளில் 2 வழக்குகள் தள்ளுபடி மேலும் 2 வழக்குகளை தள்ளுபடி செய்ய ஐகோர்ட் மறுப்பு



சென்னை, 24 ஜனவரி 2024: அண்ணா தி.மு.க. முன்னாள் அமைச்சரும், தற்போதைய மாநிலங்களவை உறுப்பினருமான சி.வி.சண்முகம் மீதான 4 அவதூறு வழக்குகளில் 2 வழக்குகளை தள்ளுபடி செய்த ஐகோர்ட் மேலும் 2 வழக்குகளை தள்ளுபடி செய்ய மறுத்துள்ளது.

12 மணி நேர வேலை நேரம் குறித்த தமிழக அரசின் சட்டத்திருத்தம், வெளி மாநில தொழிலாளர்கள் தமிழ்நாட்டை விட்டு வெளியேறியது, கஞ்சா புழக்கம், மதுபான விற்பனை ஆகியவை தொடர்பாக நடந்த போராட்டங்கள் தொடர்பாக தமிழக அரசையும், முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆகியோரை விமர்சித்து சி.வி.சண்முகம் பேசியிருந்தார்.

இந்த விவகாரங்கள் மூலம் அரசு மற்றும் முதல்வரின் நற்பெயருக்கும் களங்கம் விளைவித்ததாக கூறி சி.வி.சண்முகத்திற்கு எதிராக நான்கு அவதூறு வழக்குகளை விழுப்புரம் சிறப்பு நீதிமன்றத்தில் தமிழக அரசு தாக்கல் செய்திருந்தது. இவற்றை ரத்து செய்யக் கோரி சி.வி.சண்முகம் தாக்கல் செய்த வழக்குகள் நீதிபதி என். ஆனந்த் வெங்கடேஷ் முன்பு ஜனவரி 18ஆம் தேதி விசாரணைக்கு வந்தது.

முதல்வரை தாக்கியோ நேரடியாகவோ பேசவில்லை

அப்போது, சி.வி.சண்முகம் தரப்பில் மூத்த வழக்கறிஞர் விஜய் நாராயண் ஆஜராகி முதல்வரை தாக்கியோ, நேரடியாகவோ பேசவில்லை என்றும், தமிழக அரசை மட்டுமே விமர்சித்ததாகவும், தங்கள் போராட்டத்திற்கு பிறகு 12 மணி நேர வேலை அரசு அறிவிப்பை திரும்பப் பெறும்போது, தங்கள் கருத்து எப்படி அவதூறாக கருத முடியும் என வாதிட்டார். அவதூறு வழக்கு தொடர்வதற்கான அரசாணையை பிறப்பிக்கும்போது அரசு அதிகாரிகள் மனதை செலுத்தி விசயத்தை ஆராயாமல், இயந்திரத்தனமாக அவதூறு வழக்குகளை தாக்கல் செய்வதாக குற்றம்சாட்டினார். அப்போது நீதிபதி, அரசை விமர்சித்த அதேவேளையில், முதல்வர் பெயரையும் குறிப்பிட்டு விமர்சித்துள்ளதாகத் தானே அவதூறு வழக்கு ஆவணங்களில் உள்ளது என சி.வி.சண்முகம் தரப்பிற்கு கேள்வி எழுப்பினார்.

அரசு தலைமை வழக்கறிஞர் பி.எஸ்.ராமன் ஆஜராகி, அரசையும் முதல்வரையும் விமர்சிக்கும் வகையில் சி.வி.சண்முகம் பேசிவிட்டு, நேரடி தாக்குதல் நடத்திவிட்டு, தற்போது அவதூறு கருத்து இல்லை என கூறுவதை எப்படி ஏற்க முடியும் என கேள்வி எழுப்பினார்.

இந்த வழக்கில் இன்று தீர்ப்பளித்த நீதிபதி என். ஆனந்த் வெங்கடேஷ், மத்திய அரசை கண்டு தமிழக அரசு பயப்படுவதாகவும், கஞ்சா முதலமைச்சர் என விமர்சித்ததற்காக தொடரப்பட்ட இரண்டு வழக்குகளை ரத்து செய்து உத்தரவிட்டுள்ளார். தொழிலாளர் சட்டம் குறித்தும், 420 அரசு என பேசியதற்காக பதிவு செய்யப்பட்ட இரு வழக்குகளை ரத்து செய்ய மறுத்து, விசாரணையை எதிர்கொள்ளவும் நீதிபதி என். ஆனந்த் வெங்கடேஷ் உத்தரவிட்டுள்ளார்.

## புதுமை நாயகன் இராதாகிருஷ்ணன் பார்த்திபனின் முற்றிலும் மாறுபட்ட, குழந்தைகளை மையமாகக் கொண்ட புதிய சாகச திரில்லர் திரைப்படம் 'டீன்ஸ்'




சென்னை, 24 ஜனவரி 2024: இந்திய சினிமாவில் புதுமையான முயற்சிகளின் ஒட்டுமொத்த குத்தகைதாரராக கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேல் வெற்றிகரமாக இயங்கி வரும் நடிகர்-இயக்குநர் இராதாகிருஷ்ணன் பார்த்திபன் தனது புதிய பாதையில் இன்னொரு மைல்கல்லாக 'டீன்ஸ்' எனும் முற்றிலும் மாறுபட்ட, குழந்தைகளை மையமாகக் கொண்ட சாகச திரில்லர் திரைப்படத்தை உருவாக்கியுள்ளார்.

கால்டுவெல் வேள்நம்பி, டாக்டர் பாலசுவாமிநாதன், டாக்டர் பின்ச்சி ஸ்ரீநிவாசன் மற்றும் ரஞ்சித் தண்டபாணி ஆகியோர் இப்படத்தை தயாரித்துள்ளனர். பயாஸ்கோப் டிரீம்ஸ் எல் எல் பி மற்றும் அகிரா ப்ரொடக்ஷன்ஸ் பேனரில் 'டீன்ஸ்' தயாராகியுள்ளது. கீர்த்தனா பார்த்திபன் அக்கினேனி இதன் கிரியேட்டிவ் தயாரிப்பாளர்.

மிகவும் வித்தியாசமான முயற்சியாக இந்த திரைப்படத்தின் முதல் பார்வை திரையரங்குகளில் வெளியாவது உலகிலேயே இது தான் முதல் முறை, அதுவும் உலகெங்கிலும், அதுவும் தணிக்கை சான்றிதழோடு.

இத்திரைப்படத்திற்காக இசை அமைப்பாளர் டி. இமான் மற்றும் ஒளிப்பதிவாளர் காவ்மிக் ஆரி ஆகியோருடன் முதல் முறையாக இராதாகிருஷ்ணன் பார்த்திபன் இணைந்துள்ளார். இமான் மற்றும் காவ்மிக் ஆரியின் சிறந்த படைப்புகளில் முன்னணி வகிக்கும் வகையில் இந்த படம் உருவாகியுள்ளது. படத்தொகுப்புக்கு ஆர். சுதர்சன் பொறுப்பேற்றுள்ளார்.

இது குறித்து பேசிய இராதாகிருஷ்ணன் பார்த்திபன், "வணக்கத்திற்குரிய ஆடியன்ஸ், எங்கள் திரைப்படத்தின் முதல் பார்வை அனுபவம் இதோ உங்களுக்காக. முதல் முறையாக சென்சார் சான்றிதழோடு இது வெளியாகியுள்ளது. டி. இமான் மற்றும் ஒளிப்பதிவாளர் காவ்மிக் ஆரி ஆகியோர் உடனான எனது முதல் சிறந்த படைப்பாக இது இருக்கும்," என்று தெரிவித்துள்ளார்.

தொடந்து பேசிய அவர், "2024ம் ஆண்டின் முதல் மாதத்தின் 20ம் தேதியில் முதல் முறையாக திரையரங்குகளில் முதல் காட்சியின் இடைவேளையின் போது 'டீன்ஸ்' திரைப்படத்தின் முதல் பார்வை வெளியாகியுள்ளது. கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக என்னை ரசித்து வரும் அனைவருக்கும் முதற்கண் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்," என்றார்.

இராதாகிருஷ்ணன் பார்த்திபனின் முந்தைய படைப்பான 'இரவின் நிழல்' தேசிய விருது உள்ளிட்ட பல்வேறு அங்கீகாரங்களையும் பெற்று சாதனை படைத்த நிலையில் அவரது புத்தம் புதிய புதுமை திரைப்படம் 'டீன்ஸ்' புதிய முத்திரையை பதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 15வது நோர்வே தமிழ்த் திரைப்பட விழா - தேர்வான படங்களுக்கு தமிழர் விருது




சென்னை, 24 ஜனவரி 2024: ஒவ்வொரு ஆண்டும் வெளியாகும் தமிழ் திரைப்படங்களில் சிறந்த படங்களை தேர்வு செய்து தமிழர் விருதுகளை வழங்கி வருகிறது நோர்வே தமிழ்த் திரைப்பட விழா. பதினான்கு வருடங்களாக மிகவும் சிறப்பாக நடைபெற்றுவரும் இத் திரைப்பட விழா பிரமாண்ட விழாவாக உலக நாடுகளின் வரவேற்பை பெற்று வருகின்றது.

தற்போது 15வது நோர்வே திரைப்பட விழா நடைபெற இருக்கிறது. கடந்த ஆண்டு 2023 ல் வெளியான தமிழ் திரைப்படங்களுக்கு விருது வழங்க இருக்கிறார்கள். இது குறித்து நோர்வே தமிழ் திரைப்பட விழா இயக்குனர் வசீகரன் சிவலிங்கம் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில், "தமிழ்நாடு" தமிழ்த் திரைப்படங்களுக்கு ரூ தமிழர் விருதுகளை இந்த தைப்பொங்கல் நாளில் அறிவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.

நோர்வே தமிழ்த் திரைப்பட விழா இந்த ஆண்டு முதல் "கலைச்சிகரம்" விருதினை "புரட்சிக் கலைஞர் விஜயகாந்த் விருது" என்ற பெயரில் வழங்க இருக்கின்றோம். இட்டு நிரப்ப முடியாத, பெரும் அன்பும், பரந்த மனிதநேயமும் கொண்ட எங்கள் திரைக்கலைஞரை இந்த விருது மூலம் நினைவுபடுத்தி இதயபூர்வமாக மதிப்பளிப்பதில் பெருமையடைகின்றோம்.

2023 இல் வெளியான திரைப்படங்கள் திரையரங்கிலும், ஓ.டி.டி தளங்களில் வெளியாகி இருந்தது. இது எமது தெரிவுகளுக்கு கடினமாக இருந்தது. எமது பார்வைக்கு கிடைக்கப் பெறாத சில நல்ல திரைப்படங்கள், எங்கள் தெரிவுகளில் இடம்பெறாமல் போயிருப்பதற்கு வாய்ப்புகள் உண்டு என்பதையும் அறிவோம்.

ஆகவே இனி வரும் காலங்களில், தமிழ் நாட்டில் உள்ள திரைப்படத் தயாரிப்பாளர்கள், கலைஞர்கள் உங்கள் திரைப்படங்களை ஒவ்வொரு ஆண்டும் நிறைவு பெறுவதற்கு முன்பு எமக்கு அனுப்பி வைக்குமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

கடந்த ஆண்டு தமிழ்நாட்டில் (2023) வெளியான தமிழ்த் திரைப்படங்களில் இருந்து, எமது நடுவார்களால் தெரிவு செய்யப்பட்ட சிறந்த 20 திரைப்படங்கள், தமிழர் விருதுகளை பெறும் தமிழ் நாட்டு கலைஞர்களின் விவரங்களை

அறியத்தருகின்றோம்.


14 வருடங்களாக உங்கள் அனைவருடைய பேராதரவோடு தான் இத் திரைப்பட விழாவை சிறப்புற நடத்த முடிகிறது. ஆகவே உங்கள் பேராதரவையும், பேரன்பையும் தொடர்ந்து வழங்குவீர்கள் என்று நம்புகின்றோம்.

தமிழ்நாடு தவிர்ந்த ஏனைய நாடுகளில் வெளியாகும் குறும்படங்கள் ரூ காணொளிகள் - முழு நீளத் திரைப்படங்களுக்கு தமிழர் விருதுகள் எதிர்வரும் 25.02.2024 அன்று அறிவிக்கப்படும்.! என்று கூறியிருக்கிறார்.

நோர்வே தமிழ் திரைப்பட விழாவில் தேர்வான படங்களின் பட்டியல்

01. விடுதலை பாகம் 1 - வெற்றிமாறன், 02. அயோத்தி - ஆர்.மந்திர மூர்த்தி, 03. போர் தொழில்- விக்னேஷ் ராஜா, 04. மாமன்னன் - மாரி செல்வராஜ், 05..குட் நைட் - விநாயக் சந்திரசேகரன், 06. டாடா - கணேஷ் கே.பாபு, 07. தண்டட்டி - ராம் செங்கையா, 08. யாத்திசை - தரணி ராஜேந்திரன், 09. பொன்னியின் செல்வன் 2 - மணிரத்னம், 10. அநீதி - வசந்த பாலன், 11. நூடுல்ஸ் - மதன் குமார் தட்சணாமூர்த்தி, 12. சித்தா - அருண் குமார், 13. இறுகப்பற்று- யுவராஜ் தயாளன், 14. நாடு - எம்.சரவணன், 15. அன்னபூரணி - நிலேஷ் கிருஷ்ணா, 16. சிறகு - குட்டி ரேவதி, 17. கிடா - ஆர். ஏ.வெங்கட், 18. வி3 - அமுதவானன், 19. பார்க்கிங் - ராம்குமார் பாலகிருஷ்ணன் பார்க்கிங், 20. பம்பர் - எம்.செல்வகுமார்.

## தனுஷ், நாகார்ஜுனா, சேகர் கம்முலா, ஸ்ரீ வெங்கடேஸ்வரா சினிமாஸ் எல்எல்பி, அமிகோஸ் கிரியேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் இணையும் டி என் எஸ் படத்தின் வழக்கமான படப்பிடிப்பு பிரமாண்ட பூஜை விழாவுடன் தொடங்கப்பட்டது




சென்னை, 24 ஜனவரி 2024: மாபெரும் திறமைகள் ஒரு சேர அமையப்பெற்ற - தேசிய விருது பெற்ற நடிகர் தனுஷ் மற்றும் கிங் நாகார்ஜுனா அக்கினேனி இணைந்து ஒரு கலகலப்பான, பல்வேறு திரை நட்சத்திரங்கள் கூடும் படைப்பான #ஞிழிஷி தேசிய விருது பெற்ற இயக்குனர் சேகர் கம்முலாவால் இயக்கப்பட உள்ளது. மேலும் சுனில் நரங் மற்றும் புஸ்குர் ராம் மோகன் ராவ் ஆகியோரால், ஸ்ரீ நாராயண் தாஸ் கே நரங்கின் ஆசீர்வாதத்துடன், ஸ்ரீ வெங்கடேஸ்வரா சினிமாஸ் எல்எல்பி (ஏசியன் குழுமத்தின் ஒரு பிரிவு) நிறுவனம் சார்பில், அமிகோஸ் கிரியேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் உடன் இணைந்து, சோனாலி நரங் வழங்க பிரமாண்டமாக தயாரிக்கப்படுகிறது.

டி என் எஸ் (தனுஷ், நாகார்ஜுனா, சேகர் கம்முலா என்பதன் சுருக்கம்) திரைப்படத்தின் பூஜை விழாவில் சுனில் நரங், புஸ்குர் ராம் மோகன் ராவ், பாரத் நரங், ஜான்வி நரங் மற்றும் பலர் கலந்து கொள்ள பிரமாண்டமாக இன்று தொடங்கப்பட்டது. படத்தின் வழக்கமான படப்பிடிப்பு இன்று முன்னணி நடிகர்கள் நடிக்கும் வசனங்கள் நிறைந்த பகுதியின் படப்பிடிப்புடன் தொடங்கியது. ஹைதராபாத்தில் படப்பிடிப்பு தொடங்கப்பட்டு, முதல் கட்டமாக சில முக்கியமான காட்சிகள் படமாக்கப்பட்டுள்ளன.

தனுஷ் மற்றும் நாகார்ஜுனா ஆகியோர் முறையே அவர்களின் சங்கராந்தி வெளியீடுகளான கேப்டன் மில்லர் (தமிழ்) மற்றும் நா சாமி ரங்கா(தெலுங்கு) மூலம் பிரமாண்ட வெற்றியை வழங்கியதால், இந்த முன்னணி நடிகர்கள் இணையும் பிரம்மாண்டமான காவியத்தைப் பற்றிய உற்சாகம் பன்மடங்கு அதிகரித்துள்ளது. இரு நட்சத்திரங்களின் ரசிகர்களும் அவர்கள் திரையை ஒருசேர பகிர்ந்து கொள்வதை காண ஆவலுடன் காத்திருக்கிறார்கள். ராஷ்மிகா மந்தனா கதாநாயகியாக இப்படத்தில் நடிக்கிறார்.

ஃபிடா மற்றும் லவ் ஸ்டோரி ஆகிய இரண்டு தொடர் வெற்றிப் படங்களை கொடுத்த பிறகு, சேகர் கம்முலா பெரிய அளவிலான படைப்புடன் வருகிறார். தொழில்நுட்ப அம்சங்களிலும் படம் உறுதியுடன் சிறந்து விளங்கும்.

தொழில்நுட்பக் குழுவைப் பொறுத்தவரை, நிகேத் பொம்மி ஒளிப்பதிவு செய்ய, ராமகிருஷ்ணா சபானி மற்றும் மோனிகா நிகோத்ரே ஆகியோர் தயாரிப்பு வடிவமைப்பைக் கவனிக்க, சர்வதேச சண்டைப் பயிற்சி இயக்குநரான யானிக் பென் ஆக்ஷன் பகுதியை மேற்பார்வையிட நியமிக்கப்பட்டுள்ளனர்.

மீதமுள்ள நடிகர்கள் மற்றும் படக் குழுவினரை விரைவில் தயாரிப்பாளர்கள் அறிவிப்பார்கள்.

நடிகர்கள்: தனுஷ், நாகார்ஜுனா அக்கினேனி, ராஷ்மிகா மந்தனா மற்றும் பலர்.

தொழில்நுட்பக் குழு: இயக்குனர்: சேகர் கம்முலா, படத்தை வழங்குபவர்: சோனாலி நரங், தயாரிப்பு: ஸ்ரீ வெங்கடேஸ்வரா சினிமாஸ் எல்எல்பி, அமிகோஸ் கிரியேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட், தயாரிப்பாளர்கள்: சுனில் நரங் மற்றும் புஸ்குர் ராம் மோகன் ராவ், ஒளிப்பதிவு இயக்குனர்: நிகேத் பொம்மி, தயாரிப்பு வடிவமைப்பு: ராமகிருஷ்ணா சபானி, மோனிகா நிகோத்ரே, மக்கள் தொடர்பு: ரியாஸ் கே அஹ்மத், விளம்பரங்கள்: வால்ஸ் மற்றும் டிரெண்ட்ஸ்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி
புதன்கிழமை,
ஜனவரி 24, 2024

# வேலைக்கு வந்த சிறுமியை துன்புறுத்திய வழக்கு தி.மு.க. எம்.எல்.ஏ. மகன், மருமகள் சரணடையும் நாளிலேயே, ஜாமீன் மனுவை அமர்வு நீதிமன்றம் பரிசீலிக்க வேண்டும்



சென்னை, 24 ஜனவரி 2024: 18 வயது பணிப்பெண்ணை கொடுமைப்படுத்தியதாக, திமுக எம்.எல்.ஏ. கருணாநிதியின் மகன், மருமகள் எதிரான வன்கொடுமைத் தடைச் சட்ட வழக்கில், சரணடையும் நாளிலேயே அவர்களின் ஜாமீன் மனுவை சட்டத்திற்குட்பட்டு பரிசீலிக்கும்படி சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கு ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் தொகுதி திமுக எம்.எல்.ஏ. கருணாநிதியின் மகன் ஆண்டோ மதிவாணன் வீட்டில் வேலை செய்து வந்த சிறுமியை துன்புறுத்தியதாக, ஆண்டோ மதிவாணன், அவரது மனைவி மெர்லினா ஆன் ஆகியோர் மீது இந்திய தண்டனைச் சட்டம், வன்கொடுமை தடுப்புச் சட்டப் பிரிவுகளின் கீழ் நீலாங்கரை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. தலைமறைவாக உள்ள இருவரையும் பிடிக்க 3 தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளன. தலைமறை வாக உள்ள இருவரும் சைதாப்பேட்டை கோர்ட்டில் ஆஜராக உள்ளதாக தகவல் வெளியாகியுள்ள நிலையில் அதற்கு முன் இருவரையும் கைது செய்ய போலீசார் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இருவரையும் பிடிக்க தனிப்படை போலீசார் பெங்களூர் விரைந்துள்ளனர். இந்த நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக எம்.எல்.ஏ.வின் மருமகள் குடும்பத்தாரிடம் போலீசார் தற்போது விசாரணை நடத்தி வருகின்றனர். மெர்லினாவின் தாய், தந்தையிடம் காவல் உதவி ஆணையர் தலைமையில் விசாரணை நடந்து வருகிறது. மெர்லினா எங்கே இருக்கிறார்?, சிறுமியை தாக்கியது ஏன்? என போலீசார் விசாரித்து வருகின்றனர். மேலும் பெங்களூரு சென்றுள்ள தனிப்படை போலீசார் மெர்லினாவின் உறவினர் இல்லத்திலும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், இருவரும் சென்னை ஐகோர்ட்டில் தாக்கல் செய்துள்ள மனுவில், சென்னை மாவட்டத்தில் பதிவு செய்யப்படும் வன்கொடுமை தடைச் சட்ட வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றமான சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் சரணடையும் நாளிலேயே, தங்களது ஜாமீன் மனுவை பரிசீலிக்கும்படி அமர்வு நீதிமன்றத்துக்கு உத்தரவிட வேண்டுமென கோரிக்கை வைத்துள்ளனர்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ், இருவரும் சரணடையும் நாளிலேயே அவர்களது ஜாமீன் மனுவை பரிசீலித்து, இரு தரப்பிற்கும் வாய்ப்பளித்து, சட்டத்திற்குட்பட்டு முடிவெடுக்கும்படி சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கு உத்தரவிட்டு, வழக்கை முடித்துவைத்தார்.

# சென்னையின் நவீன தாய்மார்களுக்காக டானோன் இந்தியா ஆப்டாகுரோ வை அறிமுகப்படுத்துகிறது; குறுநடை போடும் குழந்தை ஊட்டச்சத்து வகையை மறுவரையறை செய்தல்



சென்னை, 24 ஜனவரி 2024: டானோன் இந்தியா, 'முடிந்தவரை பலருக்கு உணவின் மூலம் ஆரோக்கியத்தைக் கொண்டு வருவது ' என்ற அதன் நோக்கத்துடன், ஆப்டாகுரோ ஐ நாடு முழுவதும் அறிமுகப்படுத்தியன் மூலம் அதன் சிறு குழந்தைகளின் ஊட்டச்சத்து வரம்பை வலுப்படுத்துவதில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது. வளர்ச்சி, மூளை வளர்ச்சி மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி ஆகியவற்றை ஆதரிக்க தேவையான முக்கியமான ஊட்டச்சத்துக்களை சிறந்த முறையில் உறிஞ்சுவதற்கு உதவும் பிரீபயாடிக்குகளின் ஒரு தனித்துவமான கலவையுடன், ஆப்டாகுரோ 3 முதல் 6 ஆண்டு வயது வரம்பு குழந்தைகளின் ஊட்டச்சத்து தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.

ப்ரீபயாடிக்குகளின் தனித்துவமான கலவையானது அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களை உறிஞ்சுவதை ஆதரிக்கின்ற அதே வேளையில், ஆப்டாகுரோ, உயரம் அதிகரிப்பதற்கு 100% பால் புரதம் மற்றும் கால்சியம், நோயெதிர்ப்பு ஆரோக்கியத்திற்கு உதவுதற்கு வைட்டமின் ஏ, சி, டி மற்றும் மூளை வளர்ச்சியை ஆதரிப்பதற்கு டி எஹ் ஏ, இரும்புச்சத்து , ஃபோலிக் அமிலம் மற்றும் அயோடின் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இந்த குறைந்த கொழுப்பு, சாக்லேட் / வெண்ணிலா சுவை கொண்ட பானம் குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சி மற்றும் ஒட்டுமொத்த வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான ஒரு சிறந்த தேர்வாக செயல்படுகிறது.

ஆப்டாகுரோ போதுமான ஊட்டச்சத்தை வழங்குவதன் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஊக்குவிப்பதில், குறிப்பாக ஒரு குழந்தையின் அடித்தள ஆண்டுகளில், டானோன் இன் அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாக உள்ளது.

டானோன் இந்தியா இன் சந்தைப்படுத்தல் இயக்குநர் திரு. ஸ்ரீராம் பத்மநாபன் பேசுகையில், "டானோனில், முடிந்தவரை பலருக்கு உணவின் மூலம் ஆரோக்கியத்தை வழங்க வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம். குழந்தையின் வளர்ச்சியின் ஆரம்ப ஆண்டுகளில் சரியான அடித்தளத்தை கொண்டிருப்பது முக்கியமானதாக இருக்கிறது. எல்லா தாய்மார்களும் தங்கள் குழந்தைகளுக்கு சிறந்த ஊட்டச்சத்தை கொடுக்க விரும்புகிறார்கள் ஆனால் ஊட்டச்சத்து நன்கு உறிஞ்சப்படுவது மிகவும் முக்கியானது. ஒரு சுயாதீனமான கருத்துக்கணிப்பின் அடிப்படையில், தாய்மார்களில் 69% பேர் தங்கள் குழந்தைகள் எதிர்பார்த்தபடி வளரவில்லை என்றும், 73% பேர் ஊட்டச்சத்துக்களின் மோசமான உறிஞ்சுதல் மோசமான வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்றும் கருதினர். இதை மனதில் வைத்து, அறிவியல் ரீதியாக வடிவமைக்கப்பட்ட ஆப்டாகுரோ ஐ அறிமுகப்படுத்துகிறோம். இது ப்ரீபயாடிக்குகளின் தனித்துவமான கலவையைக் கொண்டுள்ள 37 முக்கிய ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது, இது ஊட்டச்சத்து உறிஞ்சுதலுக்கு உதவுகிறது மற்றும் குழந்தையின் வளர்ச்சி தேவைகளை ஆதரிக்கிறது." என்று கூறினார். தாய்மார்கள் தனது குழந்தையின் முழுமையான வளர்ச்சித் தேவைகளை அளவிடுவதற்கும் புரிந்துகொள்வதற்கும் உதவ, இந்த பிராண்ட் அதன் ஒரு வகையின் முதல் கருவியான ஆப்டாகுரோ க்ரோத் சக்ரா ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த கருவி குழந்தையின் உயரம், எடையை மட்டுமன்றி நோய் எதிர்ப்பு சக்தி, மூளை வளர்ச்சி மற்றும் ஒட்டுமொத்த நலனையும் அளவிடுகிறது. குறிப்பிட்ட வளர்ச்சி தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக தாய்மார்களுக்கு இலவச தனிப்பயனாக்கப்பட்ட உணவுத் திட்டம் வழங்கப்படும்.

ஆரோக்கியமான ஒரு இந்தியாவை வளர்ப்பதில் தனது பணியில் சேர பெற்றோர்கள், பராமரிப்பாளர்கள் மற்றும் கூட்டாளர்களுக்கு டானோன் அழைப்பு விடுக்கிறது. போதுமான ஊட்டச்சத்து தேவைகளை வழங்குவதற்கான அதன் முழுமையான அணுகுமுறையுடன், எந்த ஒரு குழந்தையும் அவர்கள் வளரும் ஆண்டுகளில் அத்தியாவசிய ஊட்டச்சத்தைப் பெறுவதில் பின்தங்கியிருக்கவில்லை என்பதை உறுதி செய்கின்ற வகையில், நாடு முழுவதும் உள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் அணுகக்கூடியதாக இருக்க வேண்டும் என்று நிறுவனம் விரும்புகிறது.

# க்ரோமா குடியரசு தினத்தைக் கொண்டாடும் வகையில் டிவி, ஃப்ரிட்ஜ், ஏசி, வாஷிங் மெஷின்கள், மொபைல் போன்கள், லேப் டாப்கள் மற்றும் பல சாதனங்களுக்கு சிறந்த சலுகைகளை வழங்குகிறது

சென்னை, 24 ஜனவரி 2024: இந்தியாவின் குடியரசு தினத்தைக் கொண்டாடும் வகையில், டாடா குழுமத்தின் நம்பகமான மற்றும் இந்தியாவின் முதல் ஆம்னி-சேனல் மின்னணு (எலக்ட்ரானிக்ஸ்) சாதனங்கள் சில்லறை விற்பனையாளரான க்ரோமா, மிகவும் குறைந்த விலையிலான மற்றும் கவர்ச்சிகரமான குடியரசு தின விற்பனையைப் பெருமையுடன் அறிவித்துள்ளது. 2024 ஜனவரி 20 முதல் ஜனவரி 28-ம் தேதி வரை இந்த சலுகை விலை விற்பனைக் கொண்டாட்டம் நடைபெறுகிறது. இது சிறந்த மின் சாதனங்களைக் குறைந்த விலையில் விற்பனை செய்யும் க்ரோமாவின் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது.

டிவி-கள், ரெஃப்ரிஜிரேட்டர்கள், ஏசி, வாஷிங் மெஷின், மொபைல் போன்கள், லேப்டாப்கள், கெய்சர், மைக்ரோ ஓவன், ஏர் ஃப்ரையர், மிக்சி, க்ரோமா பிராண்ட் தயாரிப்புகள் மற்றும் பிற பிராண்டுகளான ஆப்பிள், பிலிப்ஸ், எல்ஜி, சாம்சங், டைகின், ரெட்மி, ஃபேபர், ஐஎஃப்பி போன்றவற்றின் தயாரிப்பிகளுக்கு பல அற்புதமான சலுகைகளை க்ரோமா வழங்குகிறது.

999 ரூபாயில் தொடங்கும் மாதாந்திர தவணையின் (இஎம்ஐ) மூலம் சாதனங்கள் வாங்குவதை மிகவும் மலிவானதாகவும் எளிதானதாகவும் மாற்றலாம். பழைய மின்சாதனப் பொருட்களை மாற்றிக் கொள்வதன் மூலமாக 5,000 ரூபாய் வரை பலன்களைப் பெறலாம். தேர்ந்தெடுக்கப்பட்ட வங்கி சலுகைகளின் மூலம் கூடுதலாக 10 சதவீத தள்ளுபடியைப் பெறலாம். க்ரோமாவின் உயர்-தர எலக்ட்ரானிக்ஸ் பிராண்ட் பொருட்களில் அனைவருக்குமான தயாரிப்புகள் உள்ளன என்பது உறுதி.

க்ரோமா-பிராண்டட் தயாரிப்புகளுக்கு 10 சதவீத தள்ளுபடி வழங்கப்படுகிறது. உங்கள் வாஷிங் மெஷினை க்ரோமா பிராண்டட் 7.5 கிலோ ஃப்ரண்ட் லோட் வாஷிங் மெஷினாக நீங்கள் மேம்படுத்தி வாங்கிக் கொள்ளலாம். இதன் விற்பனை ரூ.1510* என்ற மாதத் தவணை விலையில் தொடங்குகிறது. க்ரோமா 50 அங்குல கூகுள் டிவி மாதத் தவணை (இஎம்ஐ) ரூ.1,694 முதல் தொடங்குகிறது*.

க்ரோமா அதன் மொபைல் மற்றும் தொழில்நுட்ப தயாரிப்புகளுக்கு கவர்ச்சிகரமான சலுகைகளை வழங்கி தொழில்நுட்ப ஆர்வலர்களை மகிழ்விக்கிறது. ஆப்பிள் பிரியர்களுக்கு, ஐபோன் 15 மாத தவணைகளில் மாதம் ரூ.1,954* என்ற மாதாந்திர தவணையில் தொடங்குகிறது. மேலும், ஆப்பிள் கைக்கடிகாரம் ரூ. 28,999-ல் தொடங்குகிறது. இது ஸ்மார்ட் வாட்ச் அணியும் தொழில்நுட்ப ஆர்வலர்களுக்கு ஒரு சிறந்த தேர்வாகும்.

இந்த விற்பனையில் ரெட்மி 13சி 5ஜி ஸ்மார்ட்போன்களும் இடம்பெற்றுள்ளன, இது குறைந்த விலையாக ரூ.12,499-ல் தொடங்குகிறது. லேப்டாப் வாங்குபவர்களுக்கு, க்ரோமா ஒரு சிறந்த சலுகையை அறிமுகப்படுத்தியுள்ளது. ஒவ்வொரு லேப்டாப் வாங்கும்போதும் ரூ. 9,990 மதிப்புள்ள இலவச உதிரி பாகங்களை க்ரோமா வழங்குகிறது.

வீட்டு உபயோகப் பொருட்கள் பிரிவில், க்ரோமா இந்த விற்பனைக்கு ஒரு சிறந்த தேர்வை வழங்குகிறதுது. எல்ஜி அல்ட்ரா ஹெச்டி ஸ்மார்ட் எல்இடி டிவி-கள் ரூ. 999 என்ற மாத தவணை விலையில் கிடைக்கின்றன. மேலும் சாம்சங்-கின் 10 கிலோ 5 ஸ்டார், முழுவதுமான தானியங்கி (ஆட்டோமேட்டிக்) டாப் லோட் வாஷிங் மெஷின்களின் விலை ரூ. 25,990 ஆகும். தங்கள் சமையலறையை மேம்படுத்த விரும்புவோருக்கு, சாம்சங்கின் ஃப்ரோஸ்ட் ஃப்ரீ 236எல் குளிர்சாதன பெட்டிகள் ரூ. 24,490 என்ற தொடக்க விலையில் கிடைக்கின்றன. இது 12 மாத இஎம்ஐ தவணைத் திட்டத்திலும் கிடைக்கிறது. டைக்கின் பிராண்டின் குளிர் மற்றும் வெப்ப இன்வெர்ட்டர் ஏசி-கள் ஆண்டு முழுவதும் பயன்படுத்த ஏற்றவை. இது, மாதத்திற்கு வெறும் ரூ. 1899/- என்ற தவணை விலையில் தொடங்குகின்றன. மேலும் மேம்பட்ட ஒலி அனுபவத்திற்காக, குறைந்த விலையிலான சிறந்த சவுண்ட் பார்கள் மாதத்திற்கு ரூ .999* என்ற தவணை விலையில் கிடைக்கின்றன.

நவீன எலக்ட்ரானிக்ஸ் சாதனங்கள் மூலம் சமையலறையை மேம்படுத்த விரும்புவோருக்கு, க்ரோமா பலவிதமான உபகரணங்களை வழங்குகிறது. ஐஎஃப்பி பிராண்டின் 32 லிட்டர் கன்வெக்ஷ்ன் மைக்ரோவேவ் ஓவன் ரூ. 15290 என்ற தொடக்க விலையில் கிடைக்கிறது. க்ரோமாவின் 3 லிட்டர் இன்ஸ்டண்ட் கெய்சர் ரூ. 2609 என்ற தொடக்க விலையில் கிடைக்கிறது. ஏஓ ஸ்மித்தின் மினிபோட் 3லிட்டர்/3 கிலோவாட் இன்ஸ்டண்ட் கெய்சர் ரூ. 3790 என்ற தொடக்க விலையில் கிடைக்கிறது. பிலிப்ஸின் ஏர் ஃபிரையர் (ஹெச்டி 9257/80 டிஜிட்டல் 5.6லிட்டர்) ரூ.12499 முதல் தொடங்குகிறது. பிலிப்ஸின் ஸ்மார்ட் எம்ஜி ஹெச்எல் 7777/00 நான்கு ஜார்கள் கொண்ட, 750 வாட் மிக்ஸர் கிரைண்டர் ரூ. 12,999 என்ற தொடக்க விலையில் கிடைக்கிறது.

இதுதவிர, ஃபேபர் பிராண்டின் அடுப்பு (குக்டாப்) ரூ. 8490 என்ற விலையில் தொடங்குகிறது, மேலும் அக்வா குவார்டின் ஆர்ஓ+யுவி+எம்டிடிஎஸ் +எஸ்எஸ் வாட்டர் பியூரிஃபையர் ரூ. 18,990 என்ற தொடக்க விலையில் கிடைக்கிறது. பல்வேறு தயாரிப்புகளுக்கான இந்தச் சலுகைகள் போட்டி விலையில் தரமான தயாரிப்புகளை வழங்குவதற்கான க்ரோமாவின் உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டுகிறது. இந்த சிறப்பு விற்பனையின்போது ஒவ்வொரு வாடிக்கையாளரும் சிறந்த தயாரிப்பை தேர்வு செய்து வாங்குவது உறுதி செய்யப்படுகிறது.

இந்த அற்புதமான சலுகைகளைப் பயன்படுத்திக் கொள்ள அனைவரும் அருகிலுள்ள க்ரோமா விற்பனை நிலையத்துக்கு விரைந்து செல்லுங்கள்! க்ரோமாவின் குடியரசு தின விற்பனையைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் தொழில்நுட்பக் கனவுகளை நனவாக்குவதற்கு இந்த வாய்ப்பைத் தவறவிடாதீர்கள்!




**அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி, சென்னை மாநகரப் போக்குவரத்துக் காவல்துறை மற்றும் நேரு இளைஞர் மையத்துடன் இணைந்து 23.01.2024 அன்று பாதுகாப்பான சாலைகளை அமைத்துக் கொடுக்க வேண்டி, 300 தன்னார்வலர்களை ஒன்றுதிரட்டி, மிகப்பெரும் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தியது. இந்நிகழ்ச்சிக்குத் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரிக்கான நேரு இளைஞர் மையத்தின் இயக்குநர் குன் அகமது, மற்றும் துணை இயக்குநர் டாக்டர் சம்பத்குமார் ஆகியோர் தலைமை வகிக்க, காவல் உதவி ஆணையர் திருவேங்கடம் அவர்கள் கொடியசைத்துத் துவக்கி வைத்தார்.**